# மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

TVEC

isharaiz.com

## வெற்றிடங்கள்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு, 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் சட்டபூர்வ ஆணைக்குழுவாக மாற்றப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது, தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களைச் செயற்படுத்துதல், தரப்படுத்துதல் மற்றும் சான்றளித்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் முதன்மைத் தேசிய ஒழுங்குமுறை நிறுவனமாகும். இவ்வாணைக்குழுவில் பின் குறிப்பற்றடுள்ள பதவிகளுக்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவின் எந்தவொரு பிரிவிலும் / தீவின் எந்தவொரு இடத்திலும் சேவை செய்யக்கூடிய திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

### சாரதி (PL 3) – பதவிகளின எண்ணிக்கை - 05

**தகுதிகள் மற்றும் அனுபவம்**

**கல்வித் தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**
க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம், கணிதம் உட்பட 6 பாடங்களில், இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு:**
மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுபவத்தைக் கொண்ட முதன்மைத் திறனற்ற சேவை ஊழியர்கள்.

**தொழில்நுட்பத்திறன் / தேர்ச்சி**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட, செல்லுபடியாகும் காலத்தைக் கொண்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

மற்றும்

மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடத்தில் பொதுவான அறிவு, நல்ல பார்வைத்திறன் மற்றும் குறைந்தபட்சம் 5 அடி 2 அங்குல உயரம் கொண்டிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**

ரூ. 43,280 – 10 x 490 – 10 x 540 – 10 x 590 – 12 x 630 – ரூ. 67,040

(மேலாண்மை சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி, இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் ரூ. 40,834.00 ஆகும்.)

**வயது**

வயது 18 க்குக் குறையாமலும் 45 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.)

**ஆட்சேர்ப்பு முறை**

பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரிய பின்னர், அப்பதவிக்குரிய கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்முறைத் தேர்ச்சியை உறுதிப்படுத்தும் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

### 2. காரியாலய உதவியாளர் பதவி (PL 1) - பதவிகளின் எண்ணிக்கை - 02

**தகுதிகள் (வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு)**

**கல்வித் தகைமை**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில், இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல்

**செயல்படுத்தல் திட்டம்**

ரூ. 40,500 – 450 x 10 – 490 x 10 – 540 x 7 – 590 x 15 – ரூ. 62,530 (மேலாண்மை சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் ரூ. 38,488.00 ஆகும்).

**வயது**

வயது 18 க்குக் குறையாமலும் 45 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரிய பின்னர், அப்பதவிக்குரிய கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்முறைத் தேர்ச்சியை உறுதிப்படுத்தும் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**ஏனைய நிபந்தனைகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

- ஆ. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- இ. பதவிக்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும், தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்வதற்கும் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ஈ. நற்பண்புகளையும் நன்மதிப்பையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**பொதுவான தகவல்கள்**

- அ. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக (EPF) உங்களது சம்பளத்திலிருந்து 8% செலுத்தப்பட வேண்டியதுடன், இவ்வாணைக்குழு உங்களது சம்பளத்தில் 12% தொகையையும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% தொகையையும் பங்களிப்பாகச் செலுத்தும்.
- ஆ. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- இ. இப்பதவி நிரந்தரமானது தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
- ஈ. ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தில் செய்யப்படக்கூடிய திருத்தங்களுக்கு உட்பட்டது.
- உ. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நிழற்படப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

www.tvec.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சான்றுப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகள் மற்றும் பிற ஆவணங்கள், 2026.10.15 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகப் பின்வரும் முகவரிக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

தற்போது அரச மற்றும் அரச சார்ந்த சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும் என்பதோடு, சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியுமா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

தொலைபேசி : 011 760 8000
தொலைநகல் (Fax): 011 255 5007
மின்னஞ்சல் : info@tvec.gov.lk
இணையதளம் : www.tvec.gov.lk

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
“நிபுணதா பியஸ”, 03 ஆம் மாடி,
354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.